DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 49/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : அர்ஜுனன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th February 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் கொல்லம்பட்டி கூம்பூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நல்லசாமியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் TN 69 1585 என்ற லாரியை சொந்தமாக வாங்கியிருந்தேன். நான் அதை பைனான்ஸ் மூலம் செய்திருந்தேன். அந்த லாரிக்கான டியூவை என்னால் கட்டமுடியவில்லை. 2012 ம் வருடம் திருவேங்கடத்தில் வைத்து

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து நடந்த சமயத்தில் எனது லாரியை நல்லசாமி ஓட்டிச்சென்றதாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. விபத்தானது திருவேங்கடம் – கோவில்பட்டி மெயின்ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி லாரி வந்து கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்று போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. எதிரி நல்லசாமியை காவல்நிலையத்தில் நான் ஆஜர்படுத்தியதாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் சரியல்ல. விபத்து நடந்ததால் மாணவர் மகேஸ்வரன் என்பவர் இறந்துபோன விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் காவல்நிலையம் வந்தபோது தெரியும்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டபோது எனது லாரியை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என வேதநாராயணன் என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை. விபத்து நடந்தபோது லாரியை யார் ஓட்டிச்சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வேதநாராயணனிடமிருந்து நல்லசாமி கடன் பெற்றிருந்தார் என்றால் சரிதான். வேதநாராயணன் அழைத்ததன்பேரில் நானும், நல்லசாமியும் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**